இருந்தால் ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்ற விகிதத்திலே கடைகளைத் திறக்க அரசு இப்போதே முடிவு எடுத்து இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சி மன்றத்தில் 8 கிராமங்கள் இருக்கின்றன. காலையில் 4 கிராமங்களுக்கும் மாலையில் 4 கிராமங்களுக்கும் இந்தக் கடையைத் திறக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சியிலும் குக்கிராமங்கள் 8 அல்ல, 10, 12 கூட இருக்கின்றன. அந்தக் குக்கிராமங்களுக்கெல்லாம் தனித்தனியாக கடைகளைத் திறக்கக்கூடிய உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. கா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச அரிசி வழங்குவதற்கு கிருஸ்துமஸையும் ரம்ஜானையும் தேர்ந்தெடுத்த தமிழக அரசுக்கு, சிறுபான்மை மக்கள் சார்பாக நான் நன்றி சொல்ல ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு இந்த முறை இலவச அரிசி கிடைக்கவில்லை. ஒவ்வொரு விழாவின் போதுகூட எல்லா இல்லங்களிலும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு வீட்டிலும் சாப்பாடு கொடுக்கப்படுவது உண்டு. ஆனால் இவ்வளவு பெரிய நிகழ்ச்சி நடத்துகின்ற தமிழக அரசு அந்த நகர சுத்தித் தொழிலாளர்களுடைய நிலையையும் கண்கொண்டு அவர்களுக்கும் இலவச அரிசி வழங்க முன் வருமா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாத வருமானம் 300 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்ற திட்டம். நகர சுத்தித் தொழிலாளர்கள் எவ்வளவு வருமானம் பெறுகிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். எனவே 300 ரூபாய்க்குக்கீழே யார் வருமானம் பெறுகிறார்களோ அவர்களுக்குத்தான் இந்தத் திட்டம் அமல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தித் துறையில் வேலைவாய்ப்பு

*143—(*வினா எண். 82)* திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்தித் துறையில் 1989 தேர்தல் அறிவிப்பிற்குப் பின் ஏதேனும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதா?

1989 மே 5]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) என்ன காரணத்தால் அவ்வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ): 19—12—88-ஆம் நாள் தேர்தல் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக் கிறது. 12—12—88-ஆம் நாள் 6 உதவி மக்கள் தொடர்புப் பணிகாலியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வேலைவாய்ப்போடு மட்டுமல்லாமல் பல மூத்த அதி காரிகள் இளையவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதைப் பற்றி முறையீடு செய்து பதவி உயர்வு கோரப்பட்டு அது விடப் பட்டு வேறு ஒரு இளையவருக்கு 27—1—89 அன்று பதவி உயர்வு அளிக்கப்பட்டு 20—1—89 அன்று விடுவித்ததாக, அதற்குமுன் 7 நாட்களும் செய்தித் துறையிலே கையொப்பம் இட்ட ஒருவரை 20-ஆம் தேதி விடுவித்ததாக, 20-ஆம் தேதி விடுவித்து, பதவி உயர்வு அளிக்கப்பட்டு 20-ஆம் தேதியே பொறுப்பேற்ற நிலை செய்தித் துறையில் நடந்திருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? நீங்கள் கூறியது போல் வேலை வாய்ப்பும்... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு கேள்வியாகக் கேட்கலாமே ?

திரு. மா. மணிமாறன் : பதவி உயர்வு அளிக்கப்பட்டதைப் போலத்தான் வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தித் துறையிலே ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தேர்தல் அறிக்கை வந்த தற்குப் பின்னாலே பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின் றனவா என்பது. ஆனால் இப்போது மூப்பு கருதி பதவி உயர்வு கொடுப்பது தொடர்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சில விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அது தொடர்பான விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் சேகரித்து இந்த மன்றத்திலே தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரி விக்கப்படும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறையிலே புதிதாக நியமிக்கப்பட்ட இந்த நியமனங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக பெயர்களைக்கேட்டு, கொடுக்கப்பட்டதா? அல்லது பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக பெயர்கள் பெறப்பட்டு, 6 காலி இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன.

விவசாயத் தொழிலாளிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம்

216—(*வினா எண். 964) திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : விவசாயக் கூலிகள், சிறு விவசாயிகள், கைவினைஞர்கள், அதைப்போன்று சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்தும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவித் திட்டம் என்ற ஒரு திட்டம் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயல் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைமலை நகரில் வீட்டுவரி.

217—(*வினா எண். 3410) திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைமலை நகரில் விதிக்கப்பட்டுள்ள வீட்டு வரி சென்னை மாநகராட்சியை விட அதிகமாக உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது ?